
TAMIL



1964, வயது 23

# மரித்தும் பேசுகிறார்!

## (Dead, yet speaking!)

### *கிரஹாம் ஸ்டெயின்ஸ், கருணை மிஷனரி*

*R. ஸ்டான்லி* (மே 2019)

மனுக்குலச் சரித்திரத்தில் இரத்தசாட்சியாய் மரித்த முதல் நபர் ஆபேல். மார்க்கம் சார்ந்த காரணத்திற்காகவே அவன் கொல்லப்பட்டான். இறைவனது வெளிப்பாட்டு மார்க்கத்திற்கும் மனிதனது கண்டுபிடிப்பு மார்க்கத்திற்கும் இடையேயுள்ள போராட்டத்திலேயே அவன் பலியானான். தேவன் செய்துமுடித்ததின் மீதுள்ள ''விசுவாசம்'' என்பதே ஆபேலின் மார்க்கம்; அவனது கொலையாளியாகிய காயீனின் மார்க்கமோ கிரியைகள் மூலம் கடவுளைத் திருப்திப்படுத்த மேற்கொள்ளப்படும் முயற்சியாகும் (ஆதி 4:3-8; எபி 11:4). சிலுவையில் கிறிஸ்து முடித்ததை விசுவாசிப்பவர்களைச் சார்ந்த ஆபேல் ''நீதிமான்'' என்று அறிவிக்கப்பட்டான்; காயீனின் செயல்களோ ''பொல்லாதவை'' என்றழைக்கப்படக் காரணம் கிரியைகளாலோ சடங்குகளாலோ ஒருவரும் இரட்சிக்கப்பட முடியாது (1 யோ 3:12; எபே 2:8,9). இந்த யுகம் முடியும்வரை இந்த மார்க்கப் போர் தொடரும். ஆபேல் (**A**-bel) முதல் சகரியா (**Z**-echariah) வரை இரத்த சாட்சிகளாய் மரித்தவர்களை இயேசு தமது இறுதிப் பிரசங்கத்தில் சுட்டிக் காட்டினார் (மத் 23:35). கிரஹாம் ஸ்டெயின்ஸ் (1941-1999) அவர்களது இரத்தசாட்சி மரணம் இவ்வரிசையைச் சார்ந்ததே. இரத்த சாட்சிகளின் காலம் முடிந்துவிடவில்லை (வெளி 6:10,11). அதிமோசமானது இனிதான்! (2 தீமோ 3:1-4,13; யோ 16:2ஆ).

1999 ஜனவரி 23 அன்று ஒடிஸா மாநிலத்தில் கிரஹாம் ஸ்டெயின்ஸ் (58) அவர்களும், பிலிப்பு (10) மற்றும் தீமோத்தேயு (6) ஆகிய அவரது இரு மகன்களும் உயிருடன் எரிக்கப்பட்டது கிறிஸ்தவர்களால் மட்டுமல்ல, கிறிஸ்தவரல்லாதவராலும் எக்காலமும் மனவேதனையுடனும் நன்றியுணர்வுடனும் நினைவிற்கொள்ளப்படும். நவீன வசதிகள் ஏதுமில்லாத தொலைதூரக் கிராமமொன்றில் இம்மூவரும் தங்களது வாகனத்திற்குள் அலுத்துத் தூங்கிக்கொண்டிருந்தபோது இச்சம்பவம் நடந்தது. ''உலகின் இருட்டுச் செயல்கள் பட்டியலில் இக்கொடூரச் செயல் இடம் பெறும்'' என்றார் இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர்களில் ஒருவராகிய K.R. நாராயணன் அவர்கள். ''நான் வெட்கித் தலைகுனிகிறேன்'' என்றார் முன்னாள் பிரதமர்களில் ஒருவரும், பாரதீய ஜனதா கட்சியில் ஒரு தலைவருமாகிய A.B. வாஜ்பாயி அவர்கள். இச்சம்பவத்தைத் தங்கள் தலையங்கக் கட்டுரையாய் வெளியிட்ட *"India Today"* எனும் பத்திரிகை இச்செயலை ''இந்தியா மீது விழுந்த வெட்கக் கேடான கறை'' என்று குறிப்பிட்டது. ஜான் ஹஸ் (1369-1415), ஜெரோம் (1365-1416), ஜோன் ஆப் ஆர்க் (1412-1431), சவோனரோலா (1452-1498), வில்லியம் டின்டேல் (1494-1536), இன்னும் இவர்கள் போன்று தங்களது விசுவாசத்திற்காய்த் தீக்கிரையாக்கப்பட்டோரின் வரிசையில் இணைந்த கிரஹாம் ஸ்டெயின்ஸ் அவர்களுக்கு இந்தியக் கிறிஸ்தவராகிய நாம் வீர வணக்கம் செலுத்துகிறோம்.

*இரத்த சாட்சிக் கூட்டம் சத்தியப் பாதையில்*
*நித்தம் தம்மைத் தத்தம் செய்து வீர சேவையில்*
*ஜீவன் சுகம் பலம் யாவையும் ஈந்ததால்*
*சுத்த சுவிசேஷம் ஓங்குதே!*

ஸ்டெயின்ஸ் அவர்கள் கொல்லப்பட்டு இப்பொழுது (2019) இருபது ஆண்டுகள் கடந்துவிட்டன. 1999இல் இந்திய மண்ணில் நடந்த ஈரமற்ற செயலைச் சமீபத்தில் வெளியாகிய *"The Least of These: The Graham Staines Story" (''இந்தச் சிறியரில் ஒருவர்'')* என்ற திரைப்படம் நமது கண்களுக்குமுன் கொண்டுவந்துவிட்டது. வேலூரிலுள்ள திரையரங்கம் ஒன்றில் நாங்கள் குடும்பமாக இப்படத்தைப் பார்த்தோம். கண்கள் குளமாகாத எவரும் அவ்வரங்கத்தில் இல்லை. இறந்தவர்கள் மீதும் இருப்பவர்கள் மீதும் பரிதாபப்பட்டுவிட்டு வழக்கம்போல் நமது வேலையைப் பார்க்கப் போகிறோமோ? செயல்பாட்டிற்குப் பரிதாபம் பதிலாக முடியாது. தகுந்த செயல்பாடு தொடராவிடில் நாம் வடித்தது முதலைக் கண்ணீர்தான். ''அவன் மரித்தும் பேசுகிறான்'' என்று முதல் இரத்தசாட்சியாகிய ஆபேலைக் குறித்துத்

... 2

திருவிவிலியம் அறிவிக்கிறது (எபி 11:4இ). இக்கட்டுரைக்கு இதனையே நான் தலைப்பாய்க் கொடுத்துள்ளேன். ஒரு மணி நேரப் பிரசங்கம் செய்வதற்கு ஸ்டெயின்ஸ் அவர்களை உயிரோடெழுப் பினால் நாம் என்ன செய்யவேண்டும் என்று அவர் சொல்லுவார் என்பதனைக் கீழ்வரும் பத்திகளில் எழுதுகிறேன் —

**1. மிஷனரிச் சரிதைகள் வாசியுங்கள்.**

ஸ்டெயின்ஸ் அவர்கள் இறுதியாக வாசித்தது *“Jungle Pilot”* எனும் புத்தகம். 1956 ஜனவரியில் ஈக்குவடாரில் ஆக்கா இனத்தவரால் ஜிம் எலியட், ரோஜர் யோடெரியன், எட் மெக்கல்லி மற்றும் பேட் பிளேமிங் ஆகியோருடன் கொல்லப்பட்ட நேட் செயின்ட் என்பவரின் சரிதையே இப்புத்தகம். மிஷனரிகளின் தொடர்ந்த பணியினால் இந்த வனப் பழங்குடியினர் கிறிஸ்துவிடம் வந்துவிட்டனர். ‘‘ஆண்டவரைச் சேவிக்கவேண்டும் என்ற தரிசனத்தைப் பைபிளுக்கு அடுத்து எனக்குத் தந்தது மிஷனரிகளின் சரிதைகளே’’ என்பது கிளாடிஸ் ஸ்டெயின்ஸ் அம்மையாரின் சாட்சி. *“Burnt Alive!”* என்ற 240-பக்க நூலை ஆங்கிலத்திலும் *‘‘உயிருடன் எரிப்பு’’* என்று தமிழிலும் ஸ்டெயின்ஸ் சரிதையை 1999 ஏப்ரலில் வெளியிட்ட Gospel Literature Service (GLS) நிறுவனத்தைப் பாராட்டுகிறோம். விஷால் மங்கல்வாடி மற்றும் நால்வர் இதன் ஆக்கியோன்கள். இந்நூல் பெங்காலி, குஜராத்தி, இந்தி, கன்னடம், மலையாளம், மராத்தி, ஒடியா மற்றும் தெலுங்கு மொழிகளிலும் உண்டு. ஜெர்மானிய மொழியிலும், பிரெஞ்சு மொழியிலும் இந்நூல் வெளிவந்துள்ளது. சவால் நிறைந்த புத்தகமிது.

தங்களது பாடங்களில் மிஷனரிச் சரிதைகளைப் பொருத்தமாய் இணைக்கும் VBS மற்றும் SU போன்ற சிறுவர் ஊழியங்களுக்காய்த் தேவனைத் துதிக்கிறோம். மிஷனரிகளின் சரிதைகள் மற்றும் சுயசரிதைகளைப் பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு வாங்கிக் கொடுத்து வாசிக்கச் செய்யவேண்டும். இந்நூல்களிலுள்ள தகவல்களை அவ்வப்போது குடும்ப ஜெபங்களில் பகிர்ந்துகொள்ளவேண்டும். உங்கள் இல்லத்தின் விருந்தினர் அறையில் கிரஹாம் ஸ்டெயின்ஸ் குடும்பப் படம் ஒன்று தொங்க விடலாம்; கிறிஸ்துவுக்காகவும் அவரது சுவிசேஷத்திற்காகவும் மக்கள் செய்யும் தியாகங்களை உங்கள் குடும்பத்தினருக்கும் வீட்டுக்கு வந்துபோகிறவர்களுக்கும் அது நினைப்பூட்டும். அல்லது அலுவலகத்தில் உங்கள் மேசைமீது ஒரு சிறிய photostandஇல் அப்படத்தை வைக்கலாம். சுவிசேஷத்தைக் குறித்து உங்கள் உடன் அலுவலரோடு ஓர் உரையாடலைத் துவக்க அது உதவும். திருமறைச் சரித்திரத்திலும் திருச்சபைச் சரித்திரத்திலும் உள்ள விசுவாச வீரரின் சரிதைகள் நமக்குச் சவாலிட்டு நம்மைச் செயல்வீரராக மாற்றுவதற்காகவே (எபி 11; 12:1,2). *“Foxe's Book of Martyrs”* மற்றும் *“Voices from the Edge of Eternity”* போன்ற நூல்களை வாசித்துவிட்டு நீங்கள் சும்மா இருக்கமுடியாது. இவ்வித மிஷனரிச் சரிதைகளில் சில ஒளித்தட்டுகளிலும் உண்டு. திருச்சபைகளும் ஜெப ஐக்கியங்களும் சுற்று நூலகம் அமைத்து மிஷனரிச் சரிதைகளை வாசிக்கும்படித் தங்கள் உறுப்பினர்களை ஊக்குவிக்க வேண்டும்.

ஏமி கார்மைக்கல் (1867-1951) அம்மையாரும், வில்லியம் கேரி (1761-1834) அவர்களும் இறையழைப்பிற்குக் கீழ்ப்படிந்து இந்தியா வந்தனர். டேவிட் லிவிங்ஸ்டனின் (1813-1873) கீழ்ப்படிதல் அவரை ஆப்பிரிக்காவிற்கு எடுத்துச் சென்றது. அதோனிராம் ஜட்சனின் (1788-1850) கீழ்ப்படிதல் அவரைப் பர்மாவில் கொண்டுபோய் நிறுத்தியது. இறையழைப்பிற்குச் செவிமடுத்து சீனாவிற்கு ஹட்சன் டெய்லர் (1832-1905) கப்பற்பயணமானார். சுவிசேஷத்தைச் சுமந்துகொண்டு சாது சுந்தர்சிங் (1889-1929?) இந்தியாவெங்கும் அலைந்தார். இறையழைப்பை அசட்டை செய்திருந்தால் நரமாம்சம் உண்ணுவோரிடையே திருப்பணி செய்ய மேரி ஸ்லெசர் (1848-1915) அம்மையார் துணிந்திருக்க மாட்டார். கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தது ஸ்டெயின்ஸ் மற்றும் அவரது இரு மகன்களின் உயிர்களைப் பறித்தது. D.L. மூடி, ஜான் வெஸ்லி, சார்லஸ் பின்னி, ஈவான் ராபர்ட்ஸ் மற்றும் இதுபோன்றோரின் சரிதைகளை வாசித்தது எனது கல்லூரி நாட்களில் (1963-1970) என்னில் எழுப்புதல் தீயைப் பற்றவைத்தது. அது இன்னும் அணைந்தபாடில்லை!

**2. மிஷனரிப் பணிக்களங்களுக்குச் சென்றுவாருங்கள்.**

ஒடிசாவிலுள்ள பாரிப்படா எனும் கிராமத்தில் வசித்து வந்த சந்தானு சத்பதி என்ற தனது இளவயது நண்பனைச் சந்திக்கவே 1965இல் கிரஹாம் ஸ்டெயின்ஸ் இந்தியாவிற்குள் நுழைந்தார். காலப்போக்கில்

Evangelical Missionary Society of Mayurbhanj (EMSM) எனும் மிஷனரி இயக்கத்தில் அவர் இணைந்தார். 1983இல் பாரிப்படாவில் இவ்வியக்கத்தின் நிர்வாகப் பொறுப்பை எடுத்துக்கொண்டார். மாயூர்பஞ்ச் என்ற பிராந்தியத்திலுள்ள தொழுநோயாளிகள் விடுதியை அவர் அரசில் ஒரு சங்கமாகப் பதிவுசெய்தார். பொதுவான தாதியர் பயிற்சியையும் பேறுகால மருத்துவப் பயிற்சியையும் முடித்திருந்த கிளாடிஸ் அம்மையார் குழந்தைநல மருத்துவப் பயிற்சியையும் எடுத்துக்கொண்டார். 1981இல் Operation Mobilisationஇல் (OM) சேர்ந்த இவ்வம்மையார் 18 மாதங்கள் இந்தியாவில் தங்கியிருந்து பீஹார், ஒடிஸா மற்றும் பஞ்சாப் ஆகிய மாநிலங்களிலுள்ள கிராமங்களில் சந்திப்புப்பணி செய்து வந்தார். ஒடிஸா விலுள்ள OM குழுவொன்றில் இருந்தபோதுதான் கிரஹாம் அவர்களைச் சந்தித்தார்; 1983 ஆகஸ்டு 6 அன்று இவர்களது திருமணம் நடைபெற்றது.

‘‘புனித நாட்டுப் பயணம்’’ (Holy Land Tour) என்ற பெயரில் கிறிஸ்தவர்களில் ஏராளமானோர் இஸ்ரவேல் நாட்டிற்குச் சென்றுவருகின்றனர். மெக்காவிற்கு முகமதியர் புண்ணிய யாத்திரை செல்வது போன்றே கிறிஸ்தவர்கள் எருசலேமுக்குச் சென்றுவருவது ஆகிவிட்டது! மத்தியத் தரைக்கடல் நாடுகளுக்கு எனது மனைவியும் நானும் பலமுறை ஊழியத்திற்காகச் சென்றிருந்தும், இஸ்ரவேல் நாட்டை எப்படியாவது பார்த்துவிடவேண்டுமென்று துடிக்கவில்லை. ஆனால் இங்கிலாந்தைச் சேர்ந்த உலகப்புகழ் பெற்ற வேதப் பண்டிதர் Rev. J. டேவிட் பாசன் அவர்கள் எங்களை இலவசப் பயணமாக இஸ்ரவேல் நாட்டிற்குத் தன்னுடன் சென்றுவர அழைப்பு விடுத்தபோது அதனை 2008இல் ஏற்றுக்கொண்டோம். திருமறை அறிஞரான பாசன் போன்ற தேவ மனிதனை நடத்துனராய்க் கொண்ட அச்சுற்றுலா நிகரற்றது எனினும் வேதாகம அகராதிகளை (Bible Dictionaries) வாசித்தே வேதாகமப் பின்னணிகளை அதிகம் தெளிவாய் நான் விளங்கிக்கொண்டுள்ளேன். ‘‘புனித நாட்டுப் பயணம்’’ செல்லத் துடிப்பதற்குப் பதிலாக, சந்திக்கப்படாத, நாகரீகமற்ற, கவனிப்பாரற்ற மக்கள் நடுவில் மிஷனரிகள் பாடுபட்டு உழைக்கும் கன்னி நிலங்களைப் பார்வையிடப் ‘‘புதிய நாட்டுப் பயணம்’’ (Needy Land Tour) மேற்கொள்ள எனது கிறிஸ்தவ நண்பர்களைக் கூவியழைக்கிறேன். நேரில் பார்ப்பதற்கு எதுவும் இணையாகாது (மத் 9:35,36; நெகே 2:13-15). குடும்பமாக நீங்கள் இஸ்ரவேல் நாட்டிற்குச் சென்றுவரச் செலவாகும் பல இலட்சம் ரூபாய்களைத் தொலைவிடக் கிராமம் ஒன்றில் ஓர் ஆலயம் கட்டவோ அல்லது மிஷனரிப் பணிக்களம் ஒன்றிற்கு ஒரு வாகனம் வாங்கவோ அன்பளிக்கலாமே! இவ்வித முதலீடுகளை நித்தியம் பாராட்டும்.

ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தை (BYM) 1970களில் நான் தலைமை தாங்கி நடத்திவந்த துவக்கக் காலங்களில் இவ்விதப் புதிய நாட்டுப் பயணங்களை அறிமுகம் செய்தேன். தனிப்பட்ட முறையில் நான் எத்தனையோ தொலைதூர ஆதிவாசிக் கிராமங்களைச் சந்தித்தும், அவற்றில் தங்கியும் வந்திருக்கிறேன். எனது மனைவியும் நானும் 1987 முதல் கர்நாடகம், ஒடிஸா, மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் தலா ஈராண்டுகள் தங்கிக் கள நிலவரங்களையும் களப்பணியாளரின் பிரச்னைகளையும் நேரடியாகப் புரிந்துகொண்டோம். ‘‘இருளிலும் சாநிழலிலும்’’ உட்கார்ந்திருக்கும் மக்களைக் குறித்த தகவல்கள் எனது மிஷனரிச் சவால் செய்திகளுக்கு அழுத்தம் தருகின்றன (மத் 4:15,16). BYM நடத்தும் வேனிற்கால மிஷனரித் திட்டத்தின்கீழ் மிஷனரிக்களங்களுக்கு ஓரிரு வாரங்கள் சென்றுவந்த வாலிபர், நங்கையர் பலர் மிஷனரிகளாய் மாறியுள்ளனர். இவ்விதக் குழுக்களில் ஒன்றுதான் கொல்லி மலையிலுள்ள ஆதிவாசிகளுக்கு இறையன்பை அறிவிக்க வாழ்காலம் முழுவதையும் செலவழித்த தியாகச் செம்மல் பிராண்ட் அம்மையார் (1879-1975) அவர்களைச் சந்தித்தது. அக்குழுவினருக்குக் கிடைத்த சவால்தான் என்னே! இவ்வம்மையாரின் மகன் Dr. பால் பிராண்ட் (1914-2003) அவர்கள்தான் தொழுநோயால் உருக்குலைந்த உறுப்புகளுள்ளோர் பலருக்குக் கை தேர்ந்த அறுவை சிகிச்சை செய்து அன்னாருக்குப் புதுவாழ்வு அளித்தவர்! தனது அமெரிக்கப் பெற்றோருடன் இந்தியாவிற்கு வந்திருந்த போதுதான் இளம் நங்கை ஐடா ஸ்கடர் அவர்கள் வேலூரில் உலகப் புகழ் பெற்ற கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி (CMC) நிறுவுவதற்கான தரிசனம் பெற்றார்கள். எங்கள் மகள் எங்களுடன் பல பணிக் களங்களுக்கு வந்திருக்கிறாள். தன்னைப் போன்று பயிற்சி பெற்ற பல ஆலோசகப் பணியாளர்களை விடக் கள மிஷனரிகளின் போராட்டங்களை அவள் கூடுதல் தெளிவாகப் புரிந்துகொள்வது பெற்றோ ராகிய எங்களுக்கு ஆச்சரியமாயில்லை. ஜவ்வாது மலையில் பணியாற்றிக்கொண்டிருந்த மூத்த மிஷனரி Rev. D. எலியாஸ் அவர்களுடன் 1974 ஜூலை மாதத்தில் நாங்கள் செலவிட்ட நாட்களை மறக்கவே முடியாது.

... 4

மத்திய கலால் மற்றும் சுங்கத்துறையிலிருந்து உயர் அதிகாரியாய் ஓய்வுபெற்ற எனது நண்பர் J. சாந்தகுமார், பாளையங்கோட்டை, அவர்கள் இந்தியாவின் பல மாநிலங்களுக்கு இதுவரை ஏறத்தாழ 130 புதிய நாட்டுப் பயணங்களை முன்னின்று நடத்திச் சென்றுள்ளார். காடு மேடு கடந்து சென்று கர்த்தர் அன்பைப் பகிர்ந்து அழகாய் நிற்கும் கள மிஷனரிகளைப் பார்த்து வருவது என்னே அனுபவம்! (ஏசா 52:7). இப்பயணக்குழுக்களில் சென்றவர்கள் தீவிர மிஷனரிப்பணி ஆதரவாளர்களாக அல்லது முழுநேர மிஷனரிகளாக மாறியுள்ளனர். வாகனங்கள், சாதனங்கள், ஆலயங்கள் மற்றும் கட்டிடங்கள் போன்ற வசதிகளை இப்பணிக்களங்கள் அவைகளைச் சந்தித்துச் சென்ற குழுவினர் மற்றும் அவர்களது நண்பர்கள் மூலம் பெற்றுள்ளன. இக்குழுக்களின் விஜயத்தால் கள மிஷனரிகளும் புதிய சபைகளும் பெறும் ஊக்குவிப்பு கொஞ்சநஞ்சமல்ல. இந்திய மிஷனரிச் சங்கம் (IMS), நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு (FMPB), இந்திய அருட்பணி இயக்கம் (IEM), சுவிசேஷ எதிரொலி மிஷனரி இயக்கம் (GEMS) ஆசீர்வாத இளைஞர் இயக்கம் (BYM), இன்றும் இவை போன்ற மிஷனரிச் சங்கங்களின் முன்னோடிப் பணிக் களங்களுக்குத் தங்களது அங்கத்தினர்களடங்கிய ஒரு சில குழுக்களை அனுப்பிவைக்கும்படித் திருச்சபைகளை வருந்திக் கேட்கிறேன். இச்சங்கங்களின் தலைவர்களுடன் நீங்கள் தொடர்புகொண்டால் இவ்விதக் களச் சந்திப்புத் திட்டங்களை உங்களுக்கு அகமகிழ்வுடன் ஒழுங்குசெய்து தருவார்கள். களங்களுக்குச் சென்று திரும்பும் குழுக்கள் தாங்கள் கேட்ட, கண்ட, அனுபவித்த காரியங்களைச் சபையினருடன் பகிர்ந்துகொள்ளும்போது நடப்பது உங்களை வியப்பில் ஆழ்த்தும். கிரஹாம் ஸ்டெயின்ஸ் திரைப்படத்தைப் பார்க்கும்படி ஆவிக்குரிய சபைகள் எனப்படும் சில தங்கள் விசுவாசிகளை ஊக்குவிக்கவில்லை; ஏனென்றால், திரையரங்குக்குள் நுழைவதே பாவமாம்! ஐயகோ, இவ்வித ஆன்மீகக் குருட்டுத்தனத்திலிருந்தும் பின்தங்கிய நிலையிலிருந்தும் எப்பொழுதுதான் வெளிவருவோமோ?

வெளிநாடுகளில் வாழும் இந்தியக் கிறிஸ்தவர்களுக்கு (NRIC) ஒரு வார்த்தை: இந்தியாவிலுள்ள உங்கள் உற்றார், உறவினர்களுக்கு அன்பளிக்கும்படி விடுமுறையில் வருமுன் வெளிநாடுகளில் தின்பண்டங்கள் மற்றும் பொருட்கள் வாங்கச் செல்லும்போது தொலைவிடங்களில் பணியாற்றும் மிஷனரிகள் குடும்பங்களுக்கும் உசிதமான சில பொருட்களை வாங்க மறவாதீர்கள். வெளிநாடுகளிலிருந்து நீங்கள் கொண்டுவரும் பொருட்களால் உங்கள் சொந்த பந்தங்களை ஒருபோதும் திருப்தி செய்துவிடமுடியாது என்று தீர்க்கதரிசனம் உரைக்கிறேன்! விடுமுறையின்போது ஒரு வாரமாவது மிஷனரிப் பணிக்களம் ஒன்றில் செலவிடவேண்டுமென்று இந்தியாவில் வந்திறங்குமுன் திட்டமிட்டுவிடுங்கள்; அதை மாற்றவே மாற்றாதீர்கள். பணிக்களங்களுக்கு உங்கள் பிள்ளைகளை அழைத்துச் செல்லுங்கள். ஆதிவாசிப் பிள்ளைகளும் மிஷனரிக் குழந்தைகளும் உடைந்துபோன பொம்மைகளைக் கூட எவ்வளவு பிரியமாய் வைத்து விளையாடுகிறார்களென்பதை உங்கள் பிள்ளைகள் பார்க்கட்டும்! இந்தியாவிலேயே வேலை செய்பவர்கள் தங்களுக்குக் கிடைக்கும் விடுமுறைப் பயண உதவித் தொகையை (LTC) மிஷனரிப் பணிக்களங்களுக்குச் சென்றுவரப் பயன்படுத்தலாமே.

### 3. எளியவரோடு அடையாளப்படுத்திக்கொள்ளுங்கள்.

ஒடிசாவிலுள்ள ஆதிவாசிகளுக்கு ஏறத்தாழ 35 ஆண்டுகள் பணியாற்றி ஸ்டெயின்ஸ் அவர்கள் கடவுளுக்குத் தொண்டாற்றினார்கள். தரித்திரத்தில் வாடும், அதிலும் குறிப்பாகத் தீண்டப்படாத, தொழுநோயாளிகளான, பழங்குடியினரிடையே வாழ்ந்து அவர்களுக்குச் சேவை செய்தார். இந்தியாவில் தீண்டப்படாதவர் இருவகையினர்: ஒன்று ஜாதி அடிப்படையிலானது, அடுத்தது வியாதி சார்ந்தது. தொழுநோயாளிகளை ஸ்டெயின்ஸ் அவர்கள் ‘‘தொட்டு’’ அவர்களுக்குச் சிகிச்சையளித்தார். தாழ்மையான இப்பணியை அவர் தெரிந்துகொண்ட விதம் இதோ: வேரா ஸ்டீவன்ஸ் என்ற அம்மையார் மாயூர்பஞ்ச் பகுதியிலுள்ள தொழுநோயாளிகளுக்கென்றே தனது வாழ்க்கையை ஊற்றிவிட்ட ஓர் ஆஸ்திரேலிய மிஷனரி. இவ்விதச் சேவையின் அத்தியாவசியத்தை இவ்வம்மையார் ஸ்டெயின்ஸ் அவர்களுடன் பகிர்ந்துகொண்டார். ஒரு சில ஒளிப்படங்கள் மூலம் அவர் இதனைச் செய்தார். தனக்குத் தேவன் நியமித்தது இப்பணிதான் என்பது ஸ்டெயின்ஸ் அவர்களுக்கு ஒரு காலைத்தியானத்தின்போது உறுதியாயிற்று. அன்று அவர் வாசித்த பகுதி மாற்கு 1:40-42. இயேசு மனதுருகி ஒரு குஷ்டரோகியைத் ‘‘தொட்டுச்’’ சுகமாக்கியது ஸ்டெயின்ஸின் இதயத்தைக் கவ்வியது. இவ்விதப்பணி தன்னை வெகுவாய் வாட்டியெடுக்கும் என்று அறிந்திருந்தும், நிறையப் பணம் சம்பாதிக்கக்கூடிய ஓர் உலக வேலை வாய்ப்பைத் துச்சமாய் எண்ணி, ‘‘அன்பரே வந்தேன், அர்ப்பணித்தேன் எந்தன் வாழ்க்கையினை’’ என்று

... 5

கிரஹாம் ஸ்டெயின்ஸ் தேவனது பாதங்களில் விழுந்தார். அநித்தியமான சுகபோக வசதிகளை ஆஸ்திரேலியாவில் அனுபவிப்பதைவிட இந்திய மக்களோடு இன்னல்களை அனுபவிப்பதையே தெரிந்துகொண்டார் (எபி 11:25). இந்தியாவில் இன்னும் தொழுநோய் முழுமையாய் ஒழிக்கப்படவில்லை. தேசியத் தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தின் (NLEP) தகவலின்படி 2017-2018இல் தமிழகத்தில் மட்டும் 4277 பேருக்குப் புதிதாய்த் தொழுநோய் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பிரதரன் சபைகளைச் சார்ந்த ஓய்வு நாள் பள்ளிகள், கடலோர SU ஊழியங்கள், கிறிஸ்தவத் தாதிமார் ஐக்கியம் போன்றவற்றில் தீவிர ஈடுபாடு கொண்டிருந்த கிளாடிஸ் அம்மையார் மகிழ்வுடனும் மனநிறைவுடனும் தனது கணவரின் அழைப்பை நிறைவேற்ற அவருக்கு முழு ஒத்துழைப்பு தந்தார்கள். இந்த மிஷனரித் தம்பதியர் தங்கள் மகள் எஸ்தரையும், மகன் பிலிப்புவையும் பாரிப்படாவிலிருந்து 2000 கி.மீ. தொலைவிலுள்ள ஊட்டிக்கு விடுதிப்பள்ளியில் தங்கிப் படிக்க அனுப்பிவைத்தனர். பெற்றோருக்கு இப்பிரிவு நிசமாகவே வேதனைதான். எஸ்தருக்கும், பிலிப்புவுக்கும் தொழுநோயாளிகளுக்கு ஆற்றப்படும் பணி வெகுவாய்ப் பிடித்திருந்தது. கடைசி மகன் தீமோத்தேயுவுக்குக் கிரிக்கெட் என்றால் அலாதிப் பிரியம். இம்மூன்று பிள்ளைகளும் ஆதிவாசிப் பிள்ளைகளோடும், தொழுநோயாளிகளின் பிள்ளைகளோடும் சரளமாய்ப் பழகி விளையாடுவதில் ஆனந்தம் கண்டார்கள்.

கிரஹாம் ஸ்டெயின்ஸ் திரைப்படத்தில் தீமோத்தேயுவிடம், ஒருவர் கேட்டது: ''நீ ஆஸ்திரேலியாவிலிருந்து வந்திருக்கிறாயா?'' அதற்கு அவனது பதில்: ''இல்லை, நான் தூசியிலிருந்து வந்திருக்கிறேன்!'' தொடர்ந்து அவன் சொன்னது: ''சச்சின் தெண்டுல்கர் போல நான் இந்தியாவிற்காய் ஆடப்போகிறேன்!'' இப்படித்தான் மக்களோடு நாம் ஒன்றித்துவிடவேண்டும்! Total Identification! ஸ்டெயின்ஸ் தம்பதியர் 1997இல் சில நாட்கள் ஆஸ்திரேலியா சென்றிருந்தபோது ஒடிசாவிலிருந்த சொந்தவூர் உணர்வு அவர்களுக்கு இல்லையாம்!

மூத்த அப்போஸ்தலராகிய யாக்கோபும், பேதுருவும், யோவானும் முதல் வரிசை மிஷனரிகளாகிய பவுலுக்கும் பர்னபாவுக்கும் ஐக்கியத்திற்கு அடையாளமாய் வலது கை கொடுத்தபோது அவர்கள் சொன்ன ஒரே காரியம், ''தரித்திரரை நினைத்துக்கொள்ளுங்கள்'' என்பதே (கலா 2:9,10). தானதர்மமே கிறிஸ்தவம் என்று சொல்லிவிடமுடியாது; ஆனால் கிறிஸ்தவமே தானதர்மம்தான்! Charity may not be Christianity; but Christianity is charity! மக்கள் மீது அவருக்கிருந்த மனதுருக்கத்தினாலேயே கிறிஸ்து அநேக அற்புதங்கள் செய்தார். ஸ்டெயின்ஸ் அவர்களது மிஷனரிப்பணிச் செயல்பாடுகள் அத்தனையும் மதமாற்றத்தை மனதிற்கொண்டவை என்பதே அவர்மீது சாட்டப்பட்ட முக்கியக் குற்றச்சாட்டு. அவர் செய்த பணிகள் யாவும் மனதுருக்கம் மற்றும் மனவிரக்கம் சார்ந்தவை, மதமாற்றத்தைக் குறிவைத்தவை அல்ல என்பதே ஸ்டெயின்ஸ் அவர்களைப்பற்றி வெளிவந்த திரைப்படத்தின் முக்கிய செய்தியாகும். நமதாண்டவர் பத்து தொழுநோயாளிகளைச் சுகப்படுத்தினார்; அவர்களில் ஒருவன்தான் அவரிடம் திரும்பி வந்து ஆத்தும இரட்சிப்பைப் பெற்றுக்கொண்டான் (லூக் 17:11-19). மனம் மாறுவோரின் சதவீதம் இயேசுவுக்கே பத்துதான் என்றால் கருணையுள்ளத்துடனும் தானதர்மச் சிந்தையுடனும் பணியாற்றும் மிஷனரிகளுக்கு இந்தச் சதவீதம் இன்னும் எவ்வளவு குறைவாயிருக்கும்! கரிசனையும் கனிவும் நிறைந்த மிஷனரிகளின் தன்னலமற்ற சேவையானது மக்களைக் கிறிஸ்துவின்பால் ஈர்க்குமானால் அது தவறா? மக்களை இழுக்கும்படிப் பொய்ப் பிரச்சாரம் செய்யும் பதவி நாட்டமும் பணப் பைத்தியமும் கொண்ட அரசியல்வாதிகளுக்கு எதிராக அல்லவோ தடைச்சட்டம் கொண்டுவர வேண்டும்? கொசுவை வடிகட்டி ஆனால் ஒட்டகத்தை விழுங்கும் குருட்டுத் தீவிரவாதிகளே, உங்களுக்கு வெட்கம்! (மத் 23:24).

தங்களது தானதர்மச் செயல்களை அதிகரிக்கும்படி எங்குமுள்ள கிறிஸ்தவருக்கு அழைப்பு விடுக்கிறேன். உங்கள் ஜெபங்களும் தர்மங்களும் தேவனுக்குமுன் சம முக்கியத்துவம் பெறுகின்றன (அப் 10:2,4,31; எபி 13:15,16). இரத்தசாட்சி மரணமும் தானதர்மமும் அன்பின் வெளிப்பாடாய் இருக்கும்போது அவையிரண்டும் தேவனுக்குமுன் சமமாக அருமையானவை (1 கொரி 13:3). தானதர்மம் செய்வதில் குறைவுபட்டால் வெட்டி எரிக்கப்படவேண்டிய கனியற்ற மரம்தான் நீங்கள் (லூக் 3:9-11). தானதர்மமற்ற உங்கள் உபவாச ஜெபங்களெல்லாம் அர்த்தமற்றவை (ஏசா 58:5-10; 1:15-17). தானதர்மத்தில் தவறியதே சோதோமின் பாவம் (எசேக் 16:49). இரட்சிப்பிற்குத் தானதர்மம் ஒரு நிபந்தனையல்ல என்பது உண்மைதான்; ஆனால் மெய்யான மனந்திரும்புதலுக்கு அது ஒரு நிரூபணமாகும் (லூக் 19:8,9). நமக்கிருப்பதில் பாதியைத் தானதர்மத்திற்காய்க் கொடுத்துவிட

... 6

வேண்டும் என்பது தீர்க்கர்களிலெல்லாம் பெரியவனாகிய திருமுழுக்கினன் யோவானின் உபதேசம் (லூக் 3:11). இயேசுவைச் சந்தித்தவுடன் அவ்வுபதேசத்தைச் சகேயு மனப்பூர்வமாய் ஏற்றுக்கொண்டான் (19:8,9). இது நமக்கு எட்டாத உயரமென்று எண்ணினால், திருச்சபைக்கும் திருப்பணிகளுக்கும் முதல் தசமபாகத்தைக் கொடுத்துவிட்டு, இன்னொரு தசமபாகத்தை ஏழை எளியவரைத் தூக்கியெடுக்கக் கொடுத்தாலென்ன? (உபா 26:12,13; 14:29; 16:14; 24:19-21; நெகே 8:10). இச்சவாலை மேற்கொண்டால் நம்மில் எத்தனை பேருக்குத் தினசரி உணவு இல்லாது போய்விடும்? எளியோர், தேவையிலிருப்போர் மற்றும் ஒதுக்கப்பட்டோருக்கு நாம் செய்வது அல்லது செய்யத் தவறுவது என்பதே நமது நித்தியத்தை நிர்ணயிக்கும் (மத் 25:31-46). எவ்வளவு பயங்கரம்!

*பசியுற்றோர்க்கும் பிணியாளிகட்கும் பட்சமாக உதவி செய்வோம்;*
*உசித நன்மைகள் நிறைந்து, தமை மறந்து, இயேசு கனிந்து திரிந்தனரே!*
*நெருக்கப்பட்டு ஒடுக்கப்பட்டோரை, நீசரை நாம் உயர்த்திடுவோம்;*
*பொறுக்கவொண்ணா கஷ்டத்துக்குள், நிஷ்டூரத்துக்குள், படுகுழிக்குள் விழுந்தனரே!*

### 4. இறையழைப்பிற்குக் கீழ்ப்படியுங்கள்.

உடல் வேதனையில் அவதிப்படும் மக்களுக்கு அயராது தொண்டாற்றிக்கொண்டிருந்த ஸ்டெயின்ஸ் அவர்கள் அவரைச் சுற்றி வாழ்ந்துகொண்டிருந்த மக்களை மூடியிருந்த ஆன்மீக அந்தகாரத்தைக் குறித்தும் வேதனைப்பட்டுக்கொண்டிருந்தார். ஆஸ்திரேலியாவில் வெளிவரும் *New Life Magazine*இல் 1977இல் நேர்முக உரையாடல் ஒன்றில் அவர் கூறியது: ‘‘பேய்ப் பிசாசுகளிலிருந்து விடுதலை பெறுவதற்காய்ச் சிறுவர் சிறுமிகளின் வயிற்றில் பழுத்த இரும்புக் கம்பிகளால் மந்திரவாதிகள் போட்ட சூட்டின் தழும்புகளைப் பார்க்கும்போது இந்த மக்களை எப்படியாவது ஒளிக்குள் கொண்டுவரவேண்டுமென்று மிஷனரிகள் துடியாய்த் துடிப்பர். நரபலி இன்னும் பழக்கத்தில் இருக்கத்தான் செய்கிறது. இதற்கு அரசு தடை விதித்திருந்தாலும் ஆங்காங்கே அது நடந்துகொண்டுதானிருக்கிறது. எங்களது வீட்டிலிருந்து 80 கி.மீ. தொலைவில் ஒரு தடுப்பணை கட்டப்பட்டுக்கொண்டிருக்கிறது. ஒரு நரபலி செலுத்தாவிடில் அணை உடைந்துவிடுமென்று மக்கள் நம்புகின்றனர். எனவே எப்படியாவது ஒருவரைக் கடத்திக் கொண்டுபோய்ப் பலி கொடுத்து கான்கிரீட்டில் புதைத்துவிடுகின்றனர்.’’ மனுக்குலத்தை வாட்டி வதைக்கும் பிரச்னைகளுக்குக் கிறிஸ்துதான் பதில் என்று ஸ்டெயின்ஸ் அவர்கள் ஆணித்தரமாய் நம்பினார்கள். அவரது அழைப்பிற்கு உந்துவிசையாய் அமைந்தது இவ்வுணர்வே.

கிறிஸ்துவைப் பின்பற்றும் ஒவ்வொருவரும் அவருக்காய் மனிதரைப் பிடிப்பவராய்த் திகழ வேண்டும் (மத் 4:19). ‘‘என் பின்னே வாருங்கள்; உங்களை ஆசீர்வதிப்பேன்’’ என்ற வசீகர வார்த்தைகளை ஒருபோதும் இயேசு சொல்லவில்லை. மாறாக, ‘‘என் பின்னே வாருங்கள்; உங்களைப் பிறர்க்கு ஆசீர்வாதமாக்குவேன்’’ என்றே அவர் அழைத்தார். இங்குதான் நாம் தலைகீழாய்ப் புரிந்துவிட்டோம். சுவிசேஷக் கூட்டங்களில் இன்று கொடுக்கப்படும் அழைப்புகளில் இப்பரிமாணம் இல்லாது போயிற்று. கிறிஸ்துவுக்காகவும், யாருக்காய் அவர் உயிர் கொடுத்தாரோ அவர்களுக்காகவும் பணியாற்ற அழைக்கப்படாத கிறிஸ்தவன் எவருமில்லை. கிறிஸ்து இருக்கும் ஒவ்வொரு இதயமும் ஒரு மிஷனரி விசை (missionary force); கிறிஸ்து இல்லாத ஒவ்வொரு இதயமும் ஒரு மிஷனரிக் களம் (mission field). நண்பரே, தனியாள் ஆத்துமாதாயப்பணிக்கும் அயலக நற்செய்தியறிவிப்புப்பணிக்கும் உங்களை அர்ப்பணியுங்கள். உங்கள் நண்பர், தொடர்புகள், உடன் பணியாளர் போன்ற யாவருக்கும் கிறிஸ்துவை அறிமுகம் செய்யுங்கள். அவரைக் குறித்து வெட்கப்படாதிருங்கள் (மாற் 8:38; ரோ 1:16). தெருமுனைகளிலும் சந்தைவெளிகளிலும் நற்செய்திப் பிரசுரங்களை விநியோகியுங்கள். கிராமங்களுக்கும் குடிசைப்பகுதிகளுக்கும் குழுக்களாய்ச் செல்லுங்கள். கணவன்-மனைவியே நல்லதொரு குழுதான் (ரோ 16:3,4). பாவிகள் இருக்குமிடத்திற்கே புறப்பட்டுச் செல்லுங்கள்! நசுக்கப்பட்டோரும் ஒதுக்கப்பட்டோரும் வாழும் பகுதிகளுக்குச் செல்லுங்கள். இறையன்பை அறிவிக்கத் துப்புரவுத் தொழிலாளர் வாழும் பகுதிக்கு எனது தாயார் (1924-1981) தனது சிநேகிதிகளுடன் வாரந்தோறும் செல்லுவார்கள். எங்கள் சொந்தவூராகிய நாசரேத்தில் இம்மக்கள் தீண்டப்படாதவர்கள்.

விவிலிய மொழிபெயர்ப்புச் சங்கங்களுக்கு உதவிக்கரம் நீட்டும்படி இலக்கியப் பட்டதாரிகளைக் கூவியழைக்கிறேன். ஹோ என்ற ஒடிசா ஆதிவாசி மொழியொன்றில் பைபிளை மொழியாக்கம் செய்ய ஸ்டெயின்ஸ் உதவினார்; புதிய ஏற்பாடு முழுவதையும் அச்சுப்பிழை திருத்தமும் செய்தார். அவர் ஒடியா

... 7

பேசுவதைப் பார்வையற்ற ஒருவன் கேட்பானானால் அவர் ஓர் ஆஸ்திரேலியர் என்று நினைக்கவே மாட்டான்! இந்தியரில் 40 சதவீதத்திற்குக் கூடுதலானோர் பேசும் இந்தி மொழியைக் கற்கும்படி உடன் கிறிஸ்தவரைக் கெஞ்சிக் கேட்கிறேன். தமிழகத்தைத் தவிர எந்த மாநிலத்திலும் இந்தி பேசிச் சமாளிக்கலாம். எனக்கு இந்தி பேசத் தெரியாதது வெட்கம்! எனது மனைவியும் நானும் ஒடிசாவில் 1990 முதல் ஈராண்டுகள் தங்கியிருந்தும் ஒரு வாக்கியம் கூட என்னால் ஒடியாவில் பேசமுடியவில்லை. ஒடியா மொழியில் சிரிக்க மட்டும் கற்றுக்கொண்டேன்! பிரசங்கி என்ற வகையில் அந்தந்தப் பிராந்திய மொழிபெயர்ப்பாளர்களின் உதவியுடன் இந்தியாவெங்கும் சமாளித்துவிட்டேன். எனது மனைவிக்கு ஒடியா, கன்னடம், மராத்தி, இந்தி ஆகிய மொழிகளில் பேசமுடியும். அந்தந்தப் பிராந்திய மொழிகளில் சரளமாய்ப் பேசப் பழகுவது மாற்றுக்கலாச்சாரச் சூழலில் பணியாற்றும் மிஷனரிகளுக்கு நாம் நினைப்பது போன்று அவ்வளவு எளிதல்ல. தமிழ்க் கிறிஸ்தவ நண்பரே, நீங்களாகவே வேலையிடமாற்றம் கேட்டு வட மாநிலங்களுக்குச் சென்று ஆங்காங்கே இறையரசிற்காய்த் தாக்கம் ஏற்படுத்துங்கள். தங்களது மகனோ மகளோ வட இந்தியாவிலிருந்து தமிழகம் திரும்பிவிட வேலையிடமாற்றத்தைப் பெற்றோர் கேட்டால் அதற்காய் ஜெபிக்காதீர்கள் என்று பிரசங்கிமாரை வேண்டிக்கொள்கிறேன்.

ஸ்டெயின்ஸ் அவர்களது இரு மகன்களாகிய பிலிப்புவும் (10) தீமோத்தேயுவும் (6) இன்று (2019) உயிரோடிருந்திருந்தால், அவர்களுக்கு முறையே 30 மற்றும் 26 வயதாகியிருக்கும்; இருவரும் இன்று 78 வயதாகியிருக்ககூடிய தங்களது அப்பாவின் அடிச்சுவடுகளில் இந்தியாவில் பணியாற்றும் மிஷனரிகளாய் மாறியிருப்பர் என்று முழுக்க முழுக்க நம்புகிறேன். எனது பிரிய வாலிபரே, நங்கையரே, இந்த வெற்றிடத்தை நிரப்ப முன்வருவீர்களா? பிரிய பெற்றோரே, ஒரு பிள்ளையையாவது அன்பர் பணிக்கு அனுப்ப மாட்டீர்களா? (1 சாமு 1:27,28).

*பிள்ளைகளே, வாலிபரே, தேவனைத் துதியுங்கள்;*
*வாழ்வதனை அவர் பணிக்கே கொடுத்து நீர் துதியுங்கள்;*
*பெரியவரே, பிரபுக்களே, தேவனைத் துதியுங்கள்;*
*செல்வங்களை இயேசுவுக்காய்ச் செலுத்தியே துதியுங்கள்!*

மதிப்பிற்குரிய கிறிஸ்தவ டாக்டர்களே, மருத்துவர் இல்லாத இடங்களுக்குச் செல்லுங்கள். திருச்சபைகள் மற்றும் பேராயங்களின் ஆதரவுடன் வேலூரிலுள்ள கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரியில் (CMC) படிக்க நேர்முகத் தேர்வுக்கு வரும் வாலிபர் நங்கையரிடம் வழக்கமாய்க் கேட்கப்படும் கேள்வி, ''நீ ஏன் டாக்டராக விரும்புகிறாய்?'' அவர்கள் கொடுக்கும் உடன் பதில், ''நான் ஒரு மிஷனரி டாக்டராக விரும்புகிறேன்'' என்பதே. இப்படித்தான் பதில் சொல்லவேண்டுமென்று பயிற்சி பெற்றிருக்கிறார்கள் போலும்! ஆனால், CMCஇல் பட்டம் பெற்று மருத்துவ வசதியில்லாத இடங்களுக்குப் பணியாற்றச் செல்லும் டாக்டர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். எனவேதான் வட இந்தியாவிலுள்ள 1200 கிறிஸ்தவ மருத்துவமனைகளில் 900க்கும் மேற்பட்டவை மூடப்படவேண்டியதாயிற்று. இன்னும் 300 மருத்துவமனைகள் மரணப்படுக்கையில் இருக்கின்றன. ஒருவேளை வெளிநாடுகளில் ஊழியம் செய்யப் பாரமும் அழைப்பும் உண்டானால் டாக்டர்களும் மருத்துவமனைகளும் பெருத்துள்ள அமெரிக்காவிற்குச் செல்வானேன்? ஆப்பிரிக்காவிற்குப் போனாலென்ன? தலைசிறந்த இந்தியப் பிரசங்கிமார் பலர் அமெரிக்காவிற்கு இடம் பெயர்ந்து, அங்கிருந்து இந்தியாவிற்கு வந்து ''மிஷனரிக்'' கன்வென்ஷன்களில் செய்தி கொடுப்பதை எனது குருவி மூளையால் புரிந்துகொள்ளமுடியவில்லை! நகைச்சுவைதான்! அமெரிக்காவிலிருந்து Dr. நெல்சன் பெல் (1894-1973) அவர்கள் சீனாவிற்கு மருத்துவ மிஷனரியாய்ச் சென்று, தங்கள் மகள் ரூத்தை ஒரு மிஷனரிப் பணிக்களச் சூழலில் வளர்த்து, அவர்களைப் பண்டிதர் பில்லி கிரஹாமிற்கு மணமுடித்தனர். பின்னர் நடந்தது சரித்திரம். இந்திய மிஷனரி இயக்கங்கள் MBBS டாக்டர்களைத் தேடி ஏமாற்றமடைகின்றன. தமிழகத்தைச் சேர்ந்த ஒரு பல் மருத்துவர் (28) கடந்த நான்கு ஆண்டுகளாக ஒடிசாவிலுள்ள பின்தங்கிய கிராமங்களில் மிஷனரியாகப் பணியாற்றி வருகிறாள். அர்ப்பணிப்பு நிறைந்த பெற்றோரால் ஊழியத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட இந்நங்கைக்கு வாழ்க்கைத் துணைவராக ஒரு மிஷனரி டாக்டர் கிடைத்தபாடில்லை. குழந்தைநல மருத்துவரான எனது மனைவி ஒடிசாவில் பல ஆண்டுகள் செலவழித்து, பட்டினிச் சாவுகளையும், வயிற்றுப் போக்கினால்கூட ஏற்படும் இறப்புகளையும் தடுக்கத் தன்னால் இயன்றதைச் செய்தாள். BYMஇன் சார்பில் 2001இல் அவள் துவக்கிய ''ஒடிசா பசிப்பிணி நிவாரணத் திட்டம்'' (Feed Odisha) நாதியற்றோருக்குத் தொடர்ந்து உதவி வருகிறது. தீர்க்கன் எரேமியா கேட்ட கேள்வியையே நானும் கேட்கிறேன்: ''இதையெல்லாம் குறித்து உங்களுக்குக் கவலையில்லையா?'' (புல 1:12).

... 8

தமிழகத்திலும் அண்டையிலுள்ள தென் மாநிலங்களாகிய ஆந்திராவிலும், கேரளத்திலும் சுவிசேஷகர், பிரசங்கிமார் மற்றும் சபை மேய்ப்பர்களின் எண்ணிக்கை கணக்கில்லாமல் பெருகி வருகிறது. வட இந்தியாவில் மேய்ப்பனில்லாத ஆடுகள்; தென்னகத்தின் பல பகுதிகளிலோ ஆடு களில்லாத மேய்ப்பர்கள். என்னே அநியாயம்! சந்திக்கப்பட்டவர்களையே சந்திப்பதும், நற்செய்தி யறிவிக்கப்பட்டவர்களுக்கே நற்செய்தியறிவிப்பதும், பிரசங்கிக்கப்பட்டவர்களுக்கே பிரசங்கிப்பதும், ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கே ஞானஸ்நானம் கொடுப்பதும், ஆறுதல்படுத்தப்பட்டவர்களையே ஆறுதல்படுத்துவதும், கவனியாது விடப்பட்டோரையோ கவனியாது விட்டுவிடுவதுமே தென்னகத்தில் நமது வழக்கமாயிற்று! கிறிஸ்தவ ஊழியரிடையே, அப்பப்பா, போட்டிக்குப் பஞ்சமேயில்லை. கிறிஸ்தவர்கள் கொடுக்கும் காணிக்கையில் 95 சதவீதத்திற்கும் மேல் கிறிஸ்தவர்களுக்காகவே செலவிடப்படுகிறது. இதுதான் பாவங்களிலெல்லாம் பாவம். இளம் ஊழியரும் நடுவயது ஊழியரும் வடநாடு சென்று அங்கே கூடாரம் போடட்டும். தென்னகத்திலேயே பிரம்மாண்ட கட்டிடங்கள் கட்ட கல்லிலும் செங்கல்லிலும் பணத்தை முடக்காதீர்கள். ''மற்ற நகர்கள்'' ''வேறே ஆடுகள்'' என்ற இயேசுவின் தரிசனம் எப்பொழுதுதான் நமது இரத்தத்தில் கலக்குமோ? (லூக் 4:42,43; யோ 10:16). சபை மேய்ப்பரே, மாதத்திற்கு ஒரு ஞாயிறு ஆராதனையிலாவது மிஷனரிச் சவால் செய்தி இருக்கட்டும். ஏழு சபைகளில் கிறிஸ்துவால் கடிந்துகொள்ளப்படாத இரு சபைகளும் மிஷனரிச் சிந்தையுள்ளவை (வெளி 2:8-10; 3:7-10).

### 5. இறக்கும்வரை உண்மையுள்ளவர்களாயிருங்கள்.

எதிர்ப்புகள், உபத்திரவங்கள் மற்றும் குற்றச்சாட்டுகள் எவ்வளவோ இருந்தாலும் எளியோர் மற்றும் தேவையிலுள்ளோர் நடுவில் கர்த்தருக்குள்ளான மகிழ்ச்சியோடு ஸ்டெயின்ஸ் தம்பதியர் தங்கள் பணியைத் தொடர்ந்தனர். கிளாடிஸ் அம்மையாரும் இளையவன் தீமோத்தேயுவும், விடுமுறைக்கு ஊட்டி பள்ளியிலிருந்து வந்திருந்த எஸ்தரோடும், பிலிப்புவோடும், கிரஹாம் அவர்களின் பிறந்த நாளை நான்கு நாட்களுக்கு முன்னர்தான் (18 ஜனவரி) கொண்டாடினார்கள். தனது தந்தை மற்றும் தம்பிமாரின் சடலங்களருகே நின்ற 13 வயது எஸ்தர் சொன்னது: ''கடவுளுக்காய் மரிக்க எனது தந்தைக்குக் கிடைத்த தகுதிக்காய் நான் பெருமையடைகிறேன்!'' இயேசுவின் பெயருக்காய் அவமானமும் பாடும் அனுபவிக்கப் பாத்திரமாய் எண்ணப்பட்டதற்காக அகமகிழ்ந்த ஆதி அப்போஸ்தலரின் மனப்பான்மை அவளுக்குக் கிடைத்தது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது (அப் 5:41). துக்கச் செய்தி கேட்டவுடன் கிளாடிஸ் அம்மையார் சொன்னது: ''எனது கணவர் மரிக்கவேண்டுமென்பது தேவனது ஏகாதிபத்தியச் சித்தமாயிருந்திருக்கிறது!'' அடக்க ஆராதனையில் கிளாடிஸ் அம்மையாரும் மகள் எஸ்தரும் *சந்தாலி* மொழியில் *"There's not a friend like the lowly Jesus"* என்ற பாடலைப் பாடினர்.

*உம்மைப்போல் யாருண்டு, எந்தன் இயேசு நாதா,*
*இந்தப் பார்தலத்தில் உம்மைப்போல் யாருண்டு?*

தீக்கிரையாக்கப்படும் ஒரு சில நாட்களுக்குமுன் சிறுவன் பிலிப்பு திரும்பத் திரும்பப் பாடிய பாடல்: *"When the roll is called up yonder, I'll be there!"*

*பரிசுத்தர் கூட்டம் இயேசுவைப் போற்றி*
*பாடி மகிழ்ந்தாடி அங்கே கூடிட*
*பரமானந்த கீதமும் அங்கெழும்ப*
*நான் அங்கிருப்பேனே ..... என் இயேசுவுடன்!*

அடக்க ஆராதனையில் தாயும் மகளும் பாடிய இன்னொரு பாடல்:

*Because He lives, I can face tomorrow;*
*Because He lives, all fear is gone;*
*Because I know He holds the future;*
*And life is worth the living, just because He lives!*

*என் மீட்பர் உயிரோடிருக்கையிலே*
*எனக்கென்ன குறையுண்டு, நீ சொல் மனமே!*

*கவலைகள் தீர்ப்பார், கண்ணீர் துடைப்பார்,*
*கடைசி மட்டும் கைவிடாதிருப்பார்;*
*மோசமே மறைப்பார், முன்னமே நடப்பார்,*
*மோட்சவழி சத்யம் வாசல் உயிரெனும்!*

... 9

பெற்றோரே, இவ்விதப் பாடல்களையெல்லாம் உங்கள் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுங்கள். பொருளாதாரக் கண்ணோட்டத்திலேயே சுழலும் இவ்வுலகில் அவர்கள் விண்ணகச் சிந்தையுடன் வளர இது உதவும். பத்து வயதே நிரம்பியிருந்த பிலிப்பு தனது பள்ளிக் கையேட்டில் ''தேவனுக்கு மகிமை செலுத்தவே வாழ விரும்புகிறேன்'' என்று எழுதி வைத்திருக்கிறான். பிள்ளைகள்மீது பெற்றோர் ஏற்படுத்தவேண்டிய பரிசுத்தத் தாக்கம் இன்று குறைந்துவருகிறது. விவிலியச் சத்தியங்களை உங்கள் குமாரருக்குள்ளும் குமாரத்திகளுக்குள்ளும் புகுத்த எவ்வளவு நேரம் செலவழிக்கிறீர்கள்?

தனது செயலினால் அல்ல, தனது எதிர்ச்செயலினாலேயே கிறிஸ்தவன் அறியப்படுவான். முழுமனதுடன் கிளாடிஸ் அம்மையார் சொன்னது: ''எனது கணவரையும் மகன்களையும் கொன்றவர்களை நான் மன்னித்துவிடுகிறேன். எனது இருதயத்தில் எவ்விதக் கசப்புணர்வும் கிடையாது. ஆனால் அவர்களது பாவங்களை இயேசு மட்டுமே மன்னிக்க முடியும்.'' இச்சம்பவம் நடைபெற்றதால் இந்தியாவை விட்டுப் போய்விடுவீர்களா எனக் கேட்கப்பட்டபோது அம்மையார் அளித்த பதில்: ''இந்த நாட்டிற்காக எனது கணவரும் பிள்ளைகளும் தங்கள் உயிரைக் கொடுத்திருக்கிறார்கள். இந்தியாதான் எனது இல்லம். இங்கிருக்கவே எனக்கு விருப்பம்!'' தொடர்ந்து அவர்கள் சொன்னது: ''எனக்கு ஒரேயொரு ஆசையுண்டு: நமது பாவங்களுக்காய்த் தமது ஜீவனைக் கொடுத்த இயேசு கிறிஸ்துவுடன் இந்நாட்டின் குடிமகன் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் உறவு ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். கிறிஸ்துவைப் போன்று பரிவுணர்வுடன் பணியாற்றத் தங்கள் வாழ்க்கையை ஊற்றிவிட ஆயத்தமாயிருக்கும் பணியாளர்கள் திரளாய் எழும்பவேண்டும் என்பதே நமது ஜெபமாயிருக்கட்டும்.'' சில மாதங்கள் கழித்து கிளாடிஸ் அம்மையாரை விமான நிலையம் ஒன்றில் சந்தித்தேன். எப்பொழுது பார்த்தாலும் சபைத் தலைவர்களாலும் பத்திரிகையாளர்களாலும் சூழப்பட்டிருப்பதால் தனித்துத் துக்கிக்கவே தனக்கு நேரமில்லை என்றார்கள். பிள்ளைகள் இறந்தபின் பெற்றோர் இருப்பதைப் போன்ற வேதனை எதுவுமில்லை. 2004ஆம் ஆண்டுவரை தொழுநோயாளிகளுக்குச் சேவை செய்துவிட்டுப் பின்னர் அம்மையார் ஆஸ்திரேலியா திரும்பினார்கள். இந்தியாவின் மிகவுயர்ந்த நான்காம் பட்டமாகிய *''பத்மஸ்ரீ''* (Padma Shree) என்பது அம்மையாருக்கு வழங்கப்பட்டது. சமூக நீதிக்கென்ற அன்னை தெரசா நினைவுப்பட்டமும் அவர்களுக்கு 2016இல் அளிக்கப்பட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக தனது கணவரும் மகன்களும் இரத்தசாட்சிகள் என்ற வகையில் ஜீவ கிரீடம் அணிவிக்கப்பட்டுக் கிறிஸ்து வாலேயே சீக்கிரம் கவுரவிக்கப்படவிருக்கும் குதூகலம் நிறைந்த நன்னாளை எதிர்நோக்கியிருக்கிறார்கள் (வெளி 2:10). மகள் எஸ்தர் இப்பொழுது Mr. ஸ்காட் என்பவரை மணந்து, நான்கு குழந்தைகளுக்குத் தாயாகியுள்ளாள். பிலிப்புவைப் போலவே அவளது மகன் இருக்கிறான்! *"The Least of These"* என்ற கிரஹாம் ஸ்டெயின்ஸ் திரைப்படத்தை இம்மாதம் (மே 2019) தாயும், மகளும், மருமகனும், ஒரு பேத்தியுடன் ஆஸ்திரேலியாவில் பார்த்தார்கள். எஸ்தரும் பிலிப்புவும் படித்த ஊட்டி எபிரோன் பள்ளியின் கலையரங்கம் "Staines Memorial Hall" என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

முதலாம் இரத்தசாட்சியாகிய ஆபேல் கொலை செய்யப்பட்டபோது அவனது இரத்தத்தின் சத்தம் நிலத்திலிருந்து சிருஷ்டி கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டது (ஆதி 4:10). இறைமகனாகிய இயேசு கொலை செய்யப்பட்டபோது, பூமி அதிர்ந்தது, கன்மலைகளும் பிளந்தன (மத் 27:51ஆ). ஸ்டெயின்ஸ் அவர்கள் தீக்கிரையாக்கப்பட்ட அதே ஆண்டில் பயங்கரமானதொரு சூறாவளி ஒடிசாவைத் தாக்கியது. இப்பிராந்தி யத்தில் இவ்வளவு கொடூரமான தாக்குதல் நடந்ததில்லை எனக் கூறப்படுகிறது. தமது ஊழியருக் கெதிரான கொடூரச் செயல்களை ஆண்டவர் கண்டும் காணாமலும் இருக்கமாட்டார்; ஆனால் பொறுமை யாயிருப்பார் (உபா 32:43; 2 இரா 9:7; சங் 79:10; வெளி 16:6; 19:2). ''விண்ணகத்தில் வீற்றிருக் கிறவர் எள்ளி நகைப்பார்; சதியாளர்களையும் சங்கடப்படுத்துவோரையும் ஆண்டவர் ஏளனம் செய்வார். தமது கோபத்தில் அவர்களுடன் பேசி, தமது கடுஞ்சினத்தால் அவர்களைக் கலங்கப்பண்ணுவார்'' (சங் 2:4,5).

தீவிரமாய் இயேசுவுக்குச் சாட்சி பகருவதால் சிறையிலடைக்கப்பட்டு முடிவில் இரத்தசாட்சியாய் மரிக்கவும் ஆயத்தமாயிருக்கவேண்டும் என்ற சூழமைவிலேயே ''மரணம்வரை உண்மையுள்ளவனாயிரு'' என்ற இயேசுவின் அழைப்பு வருகிறது (வெளி 2:10). விண்ணேறுமுன் கிறிஸ்து இறுதியாய்ப் பேசியதில் வரும் ''சாட்சிகள்'' எனும் சொல் ''இரத்தசாட்சிகள்'' என்றே பொருள்படும் (அப் 1:8). அதாவது, நமது

... 10

தலை போனாலும் கிறிஸ்துவுக்காய்ச் சாட்சி பகருவதாகும். பன்னிரு அப்போஸ்தலரில் பத்துப்பேர் இரத்தசாட்சிகளாய் மரித்தனர். ஆண்டுதோறும் 1,60,000 கிறிஸ்தவர்கள் இரத்தசாட்சிகளாய் இறக்கின்றனர் என்று *International Bulletin of Missionary Research* நமக்குப் புள்ளிவிபரம் தருகிறது. பெரிய வெள்ளியன்று கண்ணீர் வடிப்பதைவிட உலகெங்கும் துன்புறுத்தலுக்குள்ளிருக்கும் திருச்சபைகளுக்காய்த் தவறாது மன்றாடி ஜெபிப்போம்; அவைகளெல்லாம் நம்மையும் உள்ளடக்கிய கிறிஸ்துவின் உடலின் அங்கங்களல்லவோ? (லூக் 23:28-31; எபி 13:3). ''இரத்த சாட்சிகளின் இரத்தமே திருச்சபையின் வித்து'' என்ற புராதனக் கூற்றை மறவாதிருப்போம். மிஷனரிகளின் கல்லறைத் தோட்டம் என்று ஒரு காலத்தில் அழைக்கப்பட்ட பீஹார் மாநிலம் இன்று மிஷனரிப்பணிகளின் திராட்சைத் தோட்டம் என்றாகிவிட்டது. ''எல்லாரும் இரத்தசாட்சிகளாய் மரிக்க அழைக்கப்படாதிருக்கலாம்; ஆனால் பாடனுபவிக்க நாமனைவரும் ஆயத்தமாயிருக்கவேண்டும்'' என்றார் பக்தன் வாட்ச்மேன் நீ. ''கிறிஸ்து எனக்காய் மரித்திருப்பாரானால், எனது தியாகம் எதுவும் பெரிதாயிருக்க முடியாது'' என்று அறிக்கையிட்டார் மிஷனரி C.T. ஸ்டட் (1862-1931). எனது நெருங்கிய நண்பர்களில் ஒருவராகிய BYM மருத்துவ மிஷனரி Dr. M. ஜெய்சங்கர் (1967-2013) அவர்கள் ஒடிசாவில் இரத்தசாட்சி மரணம் எய்தினார். அவரது மனைவி தனது மகன் (20) மற்றும் மகளுடன் (13) திருப்பணியைத் தொடர்கிறார்கள். ஒரு பவுல் எழும்பிவரவேண்டுமானால் ஒரு ஸ்தேவான் விழவேண்டும் (அப் 7:57,58; 8:3; 9:1-6). 1975இல் என்னை 28ஆம் வயதில் முழுநேரத் திருப்பணிக்குள் உந்தித் தள்ளிய சுவர் வாசகம் ஒன்றைக் குறிப்பிட்டு இக்கட்டுரையை நிறைவு செய்கிறேன் —

*Only one life; it'll soon be past;*
*What's done for Christ alone shall last!*

*வாழ்வு ஒன்றே, கழியும் சீக்கிரமே;*
*கிறிஸ்துவுக்காய்ச் செய்ததே நிலைக்கும் என்றுமே!*

**நீங்கள் எதற்காய் உயிர் வாழ்கிறீர்களோ அது உயிர் விடுவதற்குத் தகுதியானதா?**
**Is what you are living for worth dying for?**

■ ■ ■

☐ கிரஹாம் ஸ்டெயின்ஸ் மற்றும் அவரது இரு மகன்கள் கொல்லப்பட்டது குறித்து Salvation TV நிறுவனம் 2011 ஜனவரியில் என்னிடம் 90-நிமிட நேர்காணல் ஒன்று நடத்தியது. அது *''நினைவில் நிற்கும் ஸ்டெயின்ஸ்''* என்று ஓர் ஒளித்தட்டில் உண்டு. விலை ரூ. 50/-; அனுப்பச் செலவு ரூ. 20/-. தேவையானோர் எங்களுக்கு எழுதுங்கள்.

☐ இக்கட்டுரையின் முதற்குறிப்பின் முதல் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள *''உயிருடன் எரிப்பு'' (Burnt Alive)* என்ற 240-பக்க நூலின் சில பிரதிகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் எங்களிடம் உண்டு. விலை ரூ. 150/-; அனுப்பச் செலவு ரூ. 50/-. தேவையானால் தொடர்புகொள்ளுங்கள்.

*(இக்கட்டுரையை முழுமையாகவோ சுருக்கியோ மறுபதிப்பு செய்யலாம்;*
*ஆனால் ஒன்றும் கூட்டக்கூடாது. இது ஆங்கிலத்திலும் தமிழிலும் ஆசிரியரது stanleyonbible.com*
*எனும் இணையதளத்தில் அவரது Online Letter 104இன்*
*இணைப்பாய்த் தரப்பட்டுள்ளது. இலவசமாய்ப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.)*

R. Stanley
13 Church Colony, Vellore 632 006, India
*Tel: 00 91 98437 07600, 98430 11943*
*<stanleyonbible@hotmail.com>*
*<evangeline@stanleyonbible.com>*

(புகைப்படங்கள்: பக்கங்கள் 11 & 12)


“நானும்


என் வீட்டாரும்

கர்த்தரையே

சேவிப்போம்!”


*(யோசுவா 24:15)*













''அன்பு ஒருபோதும் ஒழியாது!''




சிறுமி எஸ்தர் (1988)

### இயேசுவின் கூற்று:

"ஒருவன் என்னைப் பின்பற்றிவர
விரும்பினால் அவன் தன்னலம் துறந்து,
தனது சிலுவையை எடுத்துக்கொண்டு
என்னைப் பின்பற்றட்டும்.
ஏனெனில் தனது உயிரைக்
காத்துக்கொள்ள விரும்பும் எவனும்
அதை இழந்துவிடுவான்.
என் பொருட்டு தனது உயிரை விடுகிறவன்
அதைப் பெற்றுக்கொள்வான்!"

*(மத்தேயு 16:24,25)*




மனைவி & தாய் எஸ்தர் (2019)